## சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

**வழக்கு எண் :OS No: 169/2017 தேதி:20.01.2025**

**வா.சா. 1 – அழகுசெல்வி**

**குறுக்கு விசாரணை :** ( 4ம் பிரதிவாதி தரப்பில்)

வெங்கடாசலசெட்டியாரின் மகன் ராஜுசெட்டியார் என்பவர் என் தந்தை என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி தண்டீஸ்வரன் தாவா 1லக்க சொத்தை பொறுத்து மட்டும் தான் எதிர்வாதம் செய்கிறார் என்றால் எல்லா சொத்துக்கும் என் சகோதரர்கள் மற்றும் பிரதிவாதிகள் இடையூறு செய்வதால் எந்த இடம் என்று தெரியாமல் எல்லா சொத்துக்களுக்கும் வழக்கு போட்டுள்ளேன். தாவா 1லக்க சொத்து சம்மந்தப்பட்ட என் தந்தை பெயரில் தமிழக அரசால் 31.09.83 தேதி வழங்கப்பட்ட பிராதில் கூறியுள்ள ஒப்படைப்பு பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் ஒப்படைப்பு பட்டாவா என்றால் எனக்கு படிக்க தெரியாது. என்னிடம் படித்து காண்பிக்கப்படும் ஆவணம் சம்மந்தாக என் வழக்கறிஞரை தான் கேட்கவேண்டும். என்னிடம் காட்டப்படும் பட்டா தாவா 1லக்க சொத்திற்கு என் தந்தை பெயரில் உள்ள பட்டா எண்.264 என்றால் சரிதான். மேற்படி என் தந்தை பெயரில் உள்ள பட்டா பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 31.09.83 தேதி வழங்கப்பட்ட பிராதில் கூறியுள்ள ஒப்படைப்பு பட்டாவை வழக்கறிஞரிடம் வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். நான் பிராதில் சொல்லியுள்ள ஒப்படைப்பு பட்டாவில் தாவா 1லக்க சொத்தே இல்லை என்பதால் தான் நான் தாக்கல் செய்யாமல் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என் தந்தையின் கையெழுத்து ஆகும். மேற்படி தான செட்டில்மெண்டு பத்திரத்தில் தாவா 1லக்க சொத்து என் தந்தைக்கு தமிழக அரசால் வழங்கப்பட்ட ஒப்படைப்பு பட்டா மூலம் கிடைத்தது என்று காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. பட்டா நம்பர் சொல்லப்பட்டுள்ளது. தாவா 1லக்க சொத்தை இவ்வழக்கின் 4ம் பிரதிவாதியின் தந்தைக்கு பவர் பத்திரம் எழுதி கொடுத்தது எனக்கு தெரியாது. வழக்கு போடும்போது தான் தெரியும். என் தந்தை எனக்கு எழுதி கொடுத்த

செட்டில்மெண்டு ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள நான்கு கிரைய பத்திரங்களை நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரங்களின் அசல் என்னிடம் தான் உள்ளன. தாவா 1 லக்க சொத்து சம்மந்தப்பட்ட 31.09.83 தேதியிட்ட ஒப்படைப்பு பட்டாவும் என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். என் பெயருக்கு 2013 ஆண்டு பட்டா மாற்றினேன். பட்டா என் பெயருக்கு மாற்றுவதற்கு முன்பு ஒரு தான்செட்டில்மெண்டு ஆவணம் ஏற்படுத்தினேன் என்று 4 ம் பிரதிவாதி எங்கள் மீது நிலஅபகரிப்பு பிரிவில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த புகாரிலிருந்து தப்பிப்பதற்காக தான் இந்த வழக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மூர்த்தி, சின்னமூர்த்தி, அழகர் ஆகியோர் என் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் பத்திரத்தில் உள்ள கையெழுத்துக்கள் என் தந்தை உடையது தான் என்று தெரியவில்லை. தாவா 1 லக்க சொத்தை பொறுத்து 4 ம் பிரதிவாதியின் தந்தைக்கு என் தந்தையும் என் சகோதர்களும் 29.09.2004 தேதி அன்று பவர் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் அதை பற்றி என் அப்பா சொல்லவில்லை. மேற்படி தேதியிலேயே பணத்தை பெற்றுக்கொண்டு என் தந்தையும், சகோதர்களும் ரசீது எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அதனால் தான் என் சதோரர்கள் எனக்கு ஆதரவாக இருந்து கொண்டு இவ்வழக்கில் தோன்றாதரப்பினராகியுள்ளார்கள் என்றால் சரியல்ல. என் சகோதரர்கள் எவ்வாறு கையெழுத்து போடுவார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி பவர் பத்திரத்தின் அடிப்படையில் 05.10.2009 தேதியில் 4 ம் பிரதிவாதி கிரையம் பெற்று தாவா 1 லக்க சொத்தை அவர்அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. இந்த விவரங்கள் அனைத்தும 2004 ஆண்டிலேயே எனக்கும் என் சகோதர்களுக்கும் தெரியும் என்றால் சரியல்ல. பவர் கொடுத்த தேதிலேயே என் தந்தையும், என் சகோதர்களும் 4 ம் பிரதிவாதியின் தந்தைக்கு தாவா 1 லக்க சொத்தின் அசல் ஒப்படைப்பு ஆவணத்தை கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. பவர் பத்திரம் எழுதி கொடுத்து, தொகையை பெற்றுவிட்டு 8 வருடங்களுக்கு பிறகு மோசடியாக என் அப்பா எனக்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்டு பத்திரம் 4 ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் பிராதில் சொல்லியுள்ளவாறு தாவா 1 வது லக்க சொத்து 31.09.83 தேதி ஒப்படைப்பு கொடுக்கப்பட்டது அல்ல 15.10.69 தேதி ஒப்படைப்பு கொடுக்கப்பட்டது

என்றால் சரியல்ல. தாவா 1லக்க சொத்தை 1969 ஆண்டிலிருந்து அனுபவத்து வந்து பொதுகுடும்ப செலவிற்காக என் தந்தை 4ம் பிரதிவாதியின் தந்தைக்கு கிரையம் கொடுத்துள்ளதால் அது எங்களை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. தாவா 1லக்க சொத்தை நாங்கள் அனுபவம் செய்து வருவதற்கு ரசீது எதுவும் தாக்கல்செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். 05.10.2009 தேதி என் தந்தை எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தை ரத்து செய்ய பரிகாரம் கேட்காமலும் சுவாதீன பரிகாரம் கேட்காமலும் தாவா 1வது லக்க சொத்தை பொறுத்து இந்த வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா 2, 3 லக்க சொத்துக்களை பொறுத்து 4ம் பிரதிவாதிக்கு எந்தவித வியாஜிமூலம் இல்லை என்றால் சரியல்ல. தாவா 1வது லக்க சொத்து 2004 வருடத்திலிருந்து 4ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும் நான் கோரியுள்ள பரிகாரம் காலவதிதோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி பெற்றுள்ள கிரைய பத்திரத்தையோ, 4ம் பிரதிவாதியின் தந்தை என் தந்தையிடமிருந்து பெற்ற 2004ன் பவர் பத்திரத்தையோ நான் இன்று வரை நகல் எடுத்து பார்வையிடவில்லை என்றால் சரிதான். 4ம் பிரவாதியின் தந்தை என்னுடைய தந்தையிடமிருந்து பெற்றுள்ள பவர் பத்திரத்தில் தாவா 1வது லக்க பாத்திய விவரத்தை குறிப்பிடும் போது நான் அரசாங்கத்திடமிருந்து 15.10.69 தேதி ஒப்படைவு பெற்றது மூலம் பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி தெரியாது. தாவா 1வது லக்க சொத்து 4ம் பிரதிவாதிக்கு தான் உரிமையோ, அனுபவ பாத்தியமோ உள்ளது என்றும் எங்களுக்கு எந்தவிதமான அனுபவ பாத்தியம் கிடையாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,

அருப்புக்கோட்டை.